Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49
போன் 889

National Tamil Daily

மலர் 9
இதழ் 113
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க வைகாசி 21 ஸபர் 24 ஞாயிற்றுக்கிழமை [4-6-67]

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
கொழும்பு

# அமெரிக்க குண்டு வீச்சில் ஒரு ரஷ்யர் மாண்டார்

## அமெரிக்காவுக்கு ரஷ்யா ஆட்சேபம்

ஹனோய், ஜூன் 3

வடக்குவியட்னும் துறைமுகமொன்றில் நின்ற சோவியத் சரக்குக் கப்பல் ஒன்றின் மீது அமெரிக்க போர்விமானம் ஒன்று குண்டு வீசித் தாக்கியதில் ஒரு ரஷ்யர் மாண்டார். மற்றொருவர் பலத்த காயமடைந்தார்.

சோவியத் கப்பல் மீது அமெரிக்கப் போர் விமானங்கள் குண்டுவீசித் தாக்கியதற்கு சோவியத்ரஷ்யா அமெரிக்காவிடம் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. இனிமேலும் இவ்வித சம்பவங்கள் நிகழ்ந்தால் ரஷ்யா தனது கப்பல்களையும் சிப்பந்திகளையும் பாதுகாப்பதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க நேருமென்றும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு அமெரிக்காவே பொறுப்பேற்க வேண்டிவருமென்றும் ரஷ்யா தெரிவித்திருக்கிறது.

[3-ம் பக்கமும் பார்க்க]

## சிறைச்சாலை ஊழியர் இடமாற்றம்

கொழும்பு, சனி

அனுராதபுரம் சிறைச்சாலையில் கடமையாற்றும் சிறைச்சாலை அதிகாரிகளும் மற்றும் சிப்பந்திகள் பலரும் அங்கிருந்து வேறு இடங்களுக்கு விரைவில் மாற்றம் செய்யப்படவிருக்கின்றனர்.

களத்தாவை கொலை சம்பந்தமாக அனுராதபுரம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் இருக்கும் ஸிறில் டி சொய்சாவுக்கு சிறைச்சாலை அதிகாரிகள் சிலர் விசேஷ சலுகைகள் காண்பிப்பதாகத் தெரிவிக்கப்பட்ட புகார்களைத் தொடர்ந்தே சிறைச்சாலைக் கமிஷனர் அனுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள சிப்பந்திகள் அதிகாரிகள் சிலரை இடமாற்றம் செய்ய முடிவு செய்துள்ளார்.

## சுகாதார அழகன் தெரிவு

வவனியா, சனி

வவனியாவில் சுகாதார அழகன், சுகாதார அழகி ஆகியோர் தெரிவுசெய்யப்படவிருக்கின்றனர். இத்தெரிவு இம்மாதம் நடக்கவிருக்கும் சுகாதார விழாவில் நடைபெறும்.

இம்மாதம் 8ம் திகதி இவ்விழா ஆரம்பமாகிறது.

வியாபாரிகளின் நண்பன்!

சிங்கம் மார்க் சந்தனத் தைலம்

குமரி முதல் கிழவி வரை
குமரன் முதல்கிழவன் வரை
பாவிப்பது இதுவேதான்!

எங்குமே கிடைக்கும்!

## பீகாரில் வெய்யிலுக்கு 29 பேர் பலி

புதுடில்லி, ஜூன் 3

ஆந்திரா, ஒரிஸா, பீகார் ஆகிய ராஜ்யங்களில் வெய்யில் வெப்பம் தாங்கமுடியவில்லை.

பீகாரில் இரண்டு மாவட்டங்களில் 29 பேர் சூரிய தாக்கத்தினுல் மரணமாகினர்.

விஜயவாடாவில் 122 டிகிரி வெய்யில் காய்ந்தது. இதுவரை பதிவு செய்யப்பட்ட வெப்பத்தில், இதுவே ஆகக்கூடியதாகும்.

## தென்சென்னை இடைத்தேர்தல்

### 3மாதமாவது செல்லும்

சென்னை, ஜூன் 3

தென் சென்னை லோகசபைத் தொகுதிக்கான இடைத்தேர்தல் இன்னும் மூன்று மாதங்களுக்காவது நடைபெருது.

புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்ட பின் தேர்தல் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலைத்தயாரிக்கக்குறைந்தது மூன்று மாதங்களாவது ஆகும்.

தென்சென்னைத் தொகுதிக்கான லோகசபை ஸ்தானத்துக்குச் சென்ற தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு.சி.என். அண்ணுதுரை முதல்மந்திரியாகப் பதவி ஏற்க தமதுலோகசபைஅங்கத்தவர் பதவியை ராஜினும்மா செய்தார் ஆகவே தான், அத்தொகுதியில் இடைத் தேர்தல் நடைபெறவிருக்கிறது.

## திடீர் சோதனையை எதிர்த்து வழக்காடுவர்

கொழும்பு, சனி

சட்டவிரோதமான முறையில் குதிரைப் பந்தயம் மீது பணம் கட்டியதாகப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்குக்கு எதிராக வழக்குத் தொடருவதென சம்பந்தப்பட்டவர்கள் முடிவுசெய்துள்ளதாக அறியப்படுகிறது.

இவ்வித சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாக சமீபத்தில் பொலிசார் 85 பேரை கைதுசெய்திருந்தனர்.

பொலிசாரின் நடவடிக்கைக்கெதிராக அவர்களுக்கு மொட்டைக் கடிதங்களும் போன் கோல்களும் வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மீதான முதலாவது வழக்கு இம்மாதம் 6-ம் திகதி தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

## சம கல்வி பெற வாய்ப்பளிக்கிறது இந்நாட்டின் கல்விக் கொள்கை

### — தொண்டமான் எம். பி.

நாவலப்பிட்டி, சனி

''எல்லாக் குழந்தைகளுக்கும் சுயபாஷைகளில் கல்வி கற்க வசதியும், எல்லாப் பாடசாலைகளும் அரசாங்கப் பொறுப்பிலியங்குதல் ஆகிய இரண்டும் இந்நாட்டு கல்விச்சபை கடைப்பிடிக்கும் கொள்கைகளாகும்'' என நாவலப்பிட்டி கதிரேசன் குமார மகாவித்தியாலய பெற்றேர் - ஆசிரியர் சங்கத்தினரால் நிறுவப்பட்ட புதியக் கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பேசிய எம். பி. திரு. எஸ். தொண்டமான் கூறினுர். கண்டி உதவி வித்தியாதிகாரி திரு. எம். ஆர். பெரேரா வைபவத்திற்குத் தலைமை தாங்கினுர்.

ஏழை பணக்காரன் என்ற பாகுபாடின்றி சமகல்வி பெற மேற்சொன்ன கொள்கைகள் வழிவகுக்கும். இலங்கை - இந்திய ஒப்பந்தப்படி இங்கு வாக்குரிமை பெறுபவர்கள் சமஉரிமையோடு வாழ நாம் வழிகோலுகிறேம். இந்நாட்டின் செல்வத்தைப் பெருக்குவதில் கருத்தாயிருந்த மலையகத் தொழிலாளர் தங்களின் சமூகம் முன்னேற வழி பார்க்கவில்லை இனியும் இந்நிலை வராமல் தடுக்க முயற்சி எடுத்து வருகிறேன்'' என்ருர் திரு. தொண்டமான்,

திரு. வி. அண்ணுமலை எம். பி. பேசுகையில், கஷ்டப்பட்டு உழைத்து வாழும் ஏழைத் தொழிலாளர்கள் தங்கள் குழந்தைகளைக் கல்லூரிக்கு அனுப்பி வைப்பதால் அவர்களை முன்னேற்றுவது ஆசிரியர்களின் கடமை என்றும், இக்கல்லூரியின் பெற்ருர் - ஆசிரியர் சங்கம் இலங்கைப் பாடசாலைகள் யாவற்றுக்கும் முன்மாதிரியாக ரூபாய் 35 ஆயிரம் செலவில் ஒரு புதிய கட்டிடத்தைக் கட்டியுள்ளதென்றும் கூறினுர்.

நாவலப்பிட்டி எம். பி. திரு. சந்திரா கருணுரத்ன, நகரபிதா திரு. பி. ஏ. டேவிட்பெரேரா, வித்தியாதிகரி திரு. எஸ். விஸ்வலிங்கம், கல்லூரி அதிபர் திரு. ஆனந்தகுமாரசாமி ஆகியோரும் உரை நிகழ்த்தினர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

திக்கற்றவர் என்று நாம் உணரும்போது தான் நமக்கு இறைவன் உதவ வருவார். நம்மால் எதுவும் செய்து கொள்ளமுடியும் என்று நாம் நினைக்கும்வரை அவரை அடையமுடியாது. பூரண சரணாகதி மூலம் ஆணவத்தை அவன் அருளால் ஒடுக்கும்போதே அவருடைய உதவி கிடைக்க ஆரம்பிக்கும்.

— சுவாமி ராமதாஸ்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க ஹு வைகாசி மீ 21உ (4-6-67)

## இலங்கையும் மத்திய கிழக்கும்

மேற்கு ஆசியா எனப்படும் மத்திய கிழக்கில் தோன்றியுள்ள நெருக்கடியில் இலங்கையின் நிலை என்ன? அதாவது இலங்கை அரசாங்கத்தின் நிலை என்ன? இக்கேள்விக்கு பிரதமர் திரு. டட்லி சேனநாயகா தெளிவாகப் பதில் சொல்லியிருக்கிறார். ''மத்திய கிழக்கு தகராறில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் சர்வதேச அமைதியின் நலனைக் கருதி பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்'' என்ற ஐ. நா. தலைமைக் காரியதரிசியின் கருத்தையேபிரதமர் டட்லி சேனநாயகாவும் வலியுறுத்தியிருக்கிறார். அதாவது மத்திய கிழக்கு தகராறில் சம்பந்தப்பட்டுள்ள இஸ்ரேல் பக்கமோ அரபு நாடுகள் பக்கமோ என்ற பிரச்னையல்ல உலகில் சமாதானம் நிலவ வேண்டுமென்பதே இலங்கையின் கொள்கை என்பதையும் சமாதானத்தின் பக்கமே இலங்கை சார்ந்திருக்குமென்பதையும் பிரதமர் தெளிவாகக்கூறியிருக்கிறார்.

மத்திய கிழக்கு நெருக்கடி இன்று நேற்று ஏற்பட்டதல்ல. 1948-ம் ஆண்டில் இஸ்ரேல் உருவானது தொடக்கம் மத்தியகிழக்குத் தகராறும் உருவானது. அடிக்கடி சண்டைகளும் சச்சரவுகளும் அங்கு நிகழ்வது சகஜம். இன்று நாளை முடிவடையக்கூடியவிஷயமுமல்ல இது. இஸ்ரேலும் அரபு நாடுகளும் [அரபு நாடுகள் அனைத்துமல்ல என்று சொல்லலாம்] நேரடியாக இத்தகராறில் சம்பந்தப்பட்டிருப்பினும் பின்னணியில் வல்லரசுகளின் ஆதரவும் அக்கறையும் தூண்டுதலும் உள்ளன என்பதை மறுக்கவும் முடியாது; மறைக்கவும் முடியாது. வல்லரசுகளின் அக்கறைக்கு உலகிற்குத் தேவையான எண்ணெய் அதாவது பெட்ரோல், மண்ணெண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருள்களும் பெருமளவில் இங்கிருந்து கிடைப்பதேயாகும்.

மத்திய கிழக்கில் இன்று தோன்றியுள்ள நெருக்கடியில் இலங்கையின் நிலை என்ன? அது எத்தகைய போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்? மத்திய கிழக்கில் தோன்றியுள்ள தகராறு முற்றி கைகலப்பாக மாறி யுத்தமாக மூண்டால் இலங்கையும் வெகுவாகப்பாதிக்கப்படும்.

ஏற்கனவே பொருளாதார நிலைமோசமடைந்துள்ள இலங்கை 'இனி இடமில்லை' என்ற அளவுக்கு பொருளாதார அவலநிலையை அடைய நேரிடும். இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு மத்திய கிழக்குத் தகராறில் இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவித்து இஸ்ரேலினுடையவும் அமெரிக்கா, பிரிட்டன், போன்ற மேற்கத்திய வல்லரசுகளின் உதவியையும் ஆதரவையும் பெறுவது நல்லதா? அரபு நாடுகளை ஆதரித்து அரபு நாடுகளினதும் அவற்றுக்குச் சாதகமான இதரநாடுகளினதும் சோவியத் யூனியனினதும் உதவியையும் ஆதரவையும் பெறுவது நல்லதா? எந்தப்பக்கம் படை பலமும் பணபலமும் ஆட்பலமும் இருக்கிறதென்பதைக் கணித்து அந்தப் பக்கத்துக்கு ஆதரவு தெரிவிப்பது சந்தர்ப்ப விவேகமாக இருக்கலாம். ஆனால் நியாயம் எந்தப்பக்கம் இருக்கிறதென்பதுடன் உலக அமைதிக்கு எந்த வழி என்பதைக் கடைப்பிடிப்பதே சிறந்ததாகும். பிரதமர் இந்த வழியையே பின்பற்ற முன்வந்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

மத்திய கிழக்கில் இன்று தோன்றியுள்ள நெருக்கடியில் மிக முக்கியமானது அக்காபா வளைகுடாவில் இஸ்ரேலிய கப்பல்களுக்கும் இஸ்ரேல் செல்லும் இதர நாட்டுக் கப்பல்களுக்கும் ஐக்கிய அரபுக் குடியரசு தடை விதித்திருப்பதுதான். அக்காபா வளைகுடாவும் திரான் ஜலசந்தியும் 1956-ல் இஸ்ரேல் கைப்பற்றுவதற்கு முன்னர் ஐக்கிய அரபுக் குடியரசின் கட்டுப்பாட்டிலேயே இருந்த பகுதி. 1956 சூயஸ் கால்வாய் நெருக்கடியைத் தொடர்ந்து ஐக்கிய அரபுக் குடியரசின் அனுமதியுடன் வந்த ஐ. நா. அமைதிப் படையின் கண்காணிப்பில் அப்பகுதி வந்தபின் சகல நாடுகளின் கப்பல் போக்குவரத்துக்கும் அது அனுமதிக்கப்பட்டது. இன்று அரபுக் குடியரசின் கோரிக்கை மீது ஐ. நா. படை அங்கிருந்து விலக்கப்பட்டுவிட்டதால் மீண்டும் அப்பகுதி ஐக்கிய அரபுக் குடியரசின் ஆதிபத்தியத்தில் வந்துவிட்டது. ஐ. நா. அமைதிப் படை அங்கு சில காலம் தங்கியிருந்ததற்காக அக்காபா வளைகுடாவும் திரான் ஜலசந்தியும் ஐக்கிய அரபுக் குடியரசுக்கு இல்லையென்று கூறிவிட முடியாது.

இதில் பலப்பரீட்சை பார்ப்பதற்கு இடமே இல்லை. சமாதான நடவடிக்கைகள் மூலமே நல்ல தொரு முடிவுகாணவேண்டும். இந்திய—சீன எல்லை பிரச்னையிலும் இந்தோனேஷிய விடுதலையிலும் இலங்கை தனது செல்வாக்கைச் சரியாகப்பயன்படுத்தியது. மத்திய கிழக்குத் தகராறிலும் இலங்கையின் சமரச முயற்சி வீண்போக முடியாது. பிரதமர் டட்லியின் எகிப்திய விஜயம் வெற்றியளிக்கவேண்டும்.

## சிரமதானம்

கொத்மலை, சனி

ருஹுபுகஸ்தலாவ முஸ்லிம் மகாவித்தியாலய மாணவர் ஒரு மைல் நீளமான முஸ்லிம் மயானப் பாதையை சிரமதானமுயற்சியின்மூலம் சீர்ப்படுத்தினார்கள். வித்தியாலய அதிபர் திரு. எம். பி. எம். ஸகிதின் தலைமையில் இச்சிரமதானம் நடைபெற்றது.

# மயக்கமடைந்த சாட்சி ஆஸ்பத்திரியில் அனுமதி

### உயர் நீதிமன்றத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மல்லாகம் கொலைவழக்கில் சாட்சியமளித்தசின்னத்தம்பி பெண் விசாலாட்சி நேற்றுக்காலை வடபகுதி அசைஸ்நீதிமன்றத்தில் மயமயக்கமடைந்தார். இதனால் நேற்றைய விசாரணை இடை நடுவில் நிறுத்தப்பட்டது.

விசாலாட்சி மயக்கமடைந்ததுடன் உடனடியாக டாக்டருக்கு போன்செய்யப்பட்டது. நீதிமன்றத்திற்கு காரில் வந்து சேர்ந்த டாக்டர் ஜோன் பாலச்சந்திரன் விசாலாட்சியை பரிசோதனைசெய்தபின் உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கும்படி தெரிவித்ததைத் தொடர்ந்து விசாலாட்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுக் காலை எதிரி சார்பில் ஆஜரான அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன் குறுக்குவிசாரணை செய்துகொண்டிருக்கும் போதே விசாலாட்சி மயக்கமடைந்தார். சில நிமிடங்களாக விசாலாட்சியின் கைகளும், உடலும் நடுங்கிக்கொண்டிருந்தன. அட்வகேட் சண்முகநாதன் எதிரி உமது சொந்தக்காரரா? என்று கேட்டபோது சாட்சி இல்லை என்று பதிலளித்தார். தொடர்ந்து அட்வகேட் குறுக்குவிசாரணைசெய்து கொண்டிருந்தார்.

விசாலாட்சியின் நடுக்கம் அதிகரிக்கத் தொடங்கியபோது, சாட்சியின் நிலைமையை முடிக்குரிய வழக்கறிஞர் நீதியரசரின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். நீதியரசர் திரு. வி. தென்னக்கோன் இடைவேளைக்காக விசாரணையை 15 நிமிடங்கள் ஒத்திவைத்தார்.

சாட்சிக்கூண்டில் கண்கள் செருகியபடி மயக்கநிலையில் இருந்த விசாலாட்சியை மேட்றன் பிடித்துவந்து கதிரையில் உட்காரவைத்தார். அதன்பின் நீதிமன்ற விருந்தையில் உள்ள வாங்கில் சாட்சியமளித்த விசாலாட்சியை மேட்றன் படுக்கவைத்தார். மயக்கம் தெளியாததைத் தொடர்ந்து டாக்டர் வரவழைக்கப்பட்டார். சுமார் ஒருமணி நேரம் மயக்கமடைந்த நிலையில் இருந்த விசாலாட்சி, ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

நீதிமன்றம் இடைவேளையின் பின் மீண்டும் கூடியபோது, சாட்சிக்கு சுகவீனமென்றும், சாட்சியமளிக்க முடியாதநிலையில் இருப்பதாகவும் முடிக்குரிய வழக்கறிஞர், திரு. திஸாபண்டாரநாயக்கா நீதியரசரின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

சாட்சியை தான் தொடர்ந்துகுறுக்குவிசாரணைசெய்ய விருப்பதாக அட்வகேட் சண்முகநாதன் கூறினார். நீதியரசர் விசாரணையை இன்று காலை வரை ஒத்திவைத்தார்.

## பணம் உதவினர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

திருவையாறு படித்த வாலிபர் குடியேற்றத்திட்டத்தைச் சேர்ந்த வாலிபர்கள், காலித் தொகுதியில் மழையினால் பாதிக்கப்பட்ட ஹினிதும படித்த வாலிபர்கள் குடியேற்றத்திட்டத்தினருக்கு 216 ரூபாவை வழங்கியுள்ளார்கள்.

காணிநீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ஸ்ரீகாந்தா திருவையாறு குடியேற்றத்திட்டத்திற்கு விஜயம் செய்தபோது இப் பணம் கையளிக்கப்பட்டது. இக் குடியேற்றத்திட்டத்திற்குப் பொறுப்பாயுள்ள உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை, இப் பணத்தைக் கையளித்தார்.

அண்மையில்பெய்த மழையினால், ஹினிதும படித்த வாலிபர் குடியேற்றத்திட்டம், அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்ததினால், இப் பணத்தை வழங்க இங்குள்ள வாலிபர்கள் முன்வந்தார்கள் என திரு. முருகேசம்பிள்ளை கூறினார்.

திரு. எம். ஸ்ரீகாந்தா பேசும்போது, தேவையான சமயத்தில்படித்த சிங்கள வாலிபர்களுக்கு, தமிழ் வாலிபர்கள் உதவியளிக்க முன்வந்தது பாராட்டுக்குரியதென்றும், இப்படியான கூட்டுறவின் மூலமே சிங்கள—தமிழ் வாலிபர்களிடையே பரஸ்பர நல்லெண்ணம் நிலவுமென்றும் கூறினார்.

திருவையாறு விஸ்வமடு படித்த வாலிபர்களின் கோரிக்கைகளையிட்டு. திரு. ஸ்ரீகாந்தா பேசும்போது, காணிமந்திரி திரு. சி.பி.டி. சில்வா, படித்த வாலிபர்களின் பிரச்னையைத் தீர்ப்பதில் அதிகம் அக்கறை கொண்டிருப்பதாகக் கூறினார்.

## கி.மு.ச. தீர்மானங்கள்

நெடுந்தீவு, சனி

நெடுந்தீவில் உள்ள ஒரேயொருபஸ் வண்டி அடிக்கடி பழுதடைவதால் இங்குள்ள மக்கள்பெரும்கஷ்டப்படுகின்றனரென்றும் இங்கு மேலும் ஒரு பஸ்ஸை அனுப்பி பஸ் சேவையை சீரமைத்துத்தருமாறும்தேசியமய சேவைமந்திரியைக் கேட்டுக் கொள்வதெனவும்தேசியமயசேவைகள்மந்திரியையும், போக்குவரத்து மந்திரியையும் இங்கு வரவழைத்து நெடுந்தீவு மக்களின் கஷ்டங்களை நேரில் பார்வையிடச் செய்வதெனவும் நெடுந்தீவு கிழக்கு கி. மு.ச கூட்டத்தில்தீர்மானிக்கப்பட்டது.

கிழக்குப் பகுதியில் உள்ள பெரும்பாலான மக்கள் கடந்த ஆறுமாத காலம் மழையில்லாமல் ஏற்பட்ட வரட்சி காரணமாகக்குடிதண்ணீர்ப் பஞ்சத்தால் பெரும் கஷ்டத்தை அனுபவித்து வருவதால் இப் பஞ்சத்தை நீக்க முந்திய வருடங்களைப்போல் இம் முறையும் விரைவில் குடிதண்ணீர் விநியோகத்தை ஆரம்பிக்குமாறும், குழாய்நீர் விநியோகத்தை நெடுந்தீவு கிழக்கு முருகன் ஆலடிவரையாகுதல்நீட்டித் தருமாறும் அரசாங்க அதிபரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் நெடுந்தீவு காரியாதிகாரி மூலம் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## இலங்கை சுருங்குகிறது

கொழும்பு, சனி

இலங்கையின் நிலப்பரப்பு சுருங்கிவருவதாக அறிவிக்கப்கபபட்டுள்ளது. முன்னிருந்ததைவிட இலங்கை இப்போது 25 சதுர மைல் குறைந்துவிட்டது. கடலரிப்பும், வெள்ளங்களும் விரிவடைந்த ஆற்றுப்படுக்கைகளும் நிலத்தை விழுங்கிவிட்டன.

கடைசியாக நில அளவை இலாகா தயாரித்த நிலப்படத்தின் படி இலங்கையின் நிலப்பரப்பு அளவு 25,332 சதுர மைல் ஆகும்.

நிலப்பரப்புச் சுருங்கியுள்ளதுடன் இலங்கையின் நில அமைப்பிலும் மாறுதல் உண்டாகியிருக்கிறது.

இவ்வித மாற்றங்களை முன்னிட்டு நில அளவை இலாகா இப்போது புதிய நிலப்படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது.

## ஐயாறன் எழுதுகிறது

தெல்லிப்பளையிலிருந்து மலாயன் பென்சனர் சி. கந்தையா அவர்கள் எழுதுவதாவது:

எனக்கு இப்போது வயது 69. பதினைந்து வயதில், சுருட்டுத் தொழில் செய்த சில சமவயது சிறுவர்களின் தூண்டுதலால் சுருட்டுப் புகைக்கும் பழக்கம் விளையாட்டாக ஏற்பட்டது. வெகுநாட்கள் இது என் பெற்றோருக்குத் தெரியாது. 19 வயதில் மலாயாவுக்கு உத்தியோகமாகப் போனேன். அங்கு வேலை பார்க்கையிலும் இப்பழக்கம் என்னுடனேயே ஒட்டிக் கொண்டது. முதலில்யாழ்ப்பாணம் புகையிலையைப் பாவித்து வந்தேன். இது மலாயாவில் கிடைப்பது அரிது. அதனால் தம்பப்பட்டி இந்திய சுருட்டைப் பாவித்தேன். அது யாழ்ப்பாணம் புகையிலையைப் போல் காரம் இல்லாவிட்டாலும் மணம் குணத்தில் சிறந்ததென்றுதான் சொல்லவேண்டும்.

ஆரம்பத்தில் 2, 3 சுருட்டுகள் பாவித்தேன். ஏழு வருடங்களில் 25, 30 சுருட்டுகளுக்குக் கூடிவிட்டது. காலக்கிரமத்தில் கறுப்புச் சுருட்டு வெள்ளைச் சுருட்டுக்கும் மாறிவிட்டது. தொடக்கத்தில் 4—5 வெள்ளைச் சுருட்டு 4—5 வருடங்களில் 40—50க்கு உயர்ந்துவிட்டது. இந்த நிலையிலும் இதன் கெடுதியை உணரவில்லை. மலாயாவில் நேவிகட் அப்போ 10 காசுக்கு 8.

1926-ம் வருடம் நெடுங்கால லீவில் யாழ்ப்பாணம் வந்தேன். உடன் கைக்காவலாக கொஞ்சம் சிகரெட்டும் கொண்டு வந்தேன். அது சில தினங்களில் காலியானதும் ஒரு கடையில் 10 சதம் கொடுத்து சிகரெட் கேட்டேன். இரண்டே இரண்டுதான் தந்தார். திகைத்து, 'இரண்டுதானா' என்று கேட்க மனம் தூண்டியது. கேட்டால் புதிதாகப் புகைப்பவர் என்று பரிகசிப்பரென்று பேசாமல் இருந்து ஒன்றை மூட்டி ஓர் இழுப்பு இழுத்தேன். அவ்வளவுதான். உடனே அந்த இழுப்பு என் தொண்டையைத் தாக்கியது. வீடு திரும்பும் வரை ஒரே இருமல்தான். மற்றசிகரெட்டைவீசிவிட்டு வீடு வந்து சேர்ந்தேன்.

ஃ ஃ ஃ

கொண்டல் பழம் தின்ற நரிபோல் அன்றே சிகரெட்டுக்கு முழுக்குப் போட்டு, பழையபடி யாழ்ப்பாணம் புகையிலையை பாவித்தேன். 1941ல் பென்சனில்ஊருக்கு வந்துவிட்டேன். வந்தும் ஒன்றுமாறி ஒன்றுக்கு அடிமையானதல்லாமல் இந்தப் புகைப் பழக்கத்தை என்னால் விட முடியவில்லை. விட வேண்டுமென்று தீவிரமாகச் சிந்தித்ததுமில்லை.

ஒருமுறை 3 மாத அகில இந்திய யாத்திரை செய்யப் புறப்பட்டேன். அங்குதென்னிந்தியாவில் கடைத் தெருக்களிலோ, புகைவண்டிகளிலோ, பஸ் வண்டிகளிலோ, எவரும்சுருட்டோ சிகரெட்டோ புகைப்பதில்லை. இது எனக்குப் பெரும் சங்கடமாகிவிட்டது. அதனால் புகைத்தலுக்குப் பதிலாக பொடியை பாவிக்கத் தொடங்கினேன். வடஇந்தியாவில் பலரும் பகிரங்கமாகப் புகைக்கின்றனர். என்றாலும் அங்கும்

[6-ம் பக்கம் பார்க்க]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்காபா வளைகுடா அமைதியான முறையில் திறக்கப்படாவிடின் பெரும் போர் மூளும்

## பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் எச்சரிக்கை

## பிரான்ஸ், உட்பட மற்ற ஐரோப்பிய நாடுகள் ஆதரவு இல்லை





வாஷிங்டன், ஜூன் 3

அக்காபா வளைகுடா சமாதான முறையில் திறந்துவிடப்படாவிட்டால், அது ஓர் உள்ளூர்ப் போரில் மட்டும் முடிவுறாது, ஒரு பெரிய யுத்தத்திலேயே முடிவுறும் என பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சன் இங்கு எச்சரித்துள்ளார். மேற்கு ஆசிய நிலைமை பற்றி அமெரிக்க ஜனாதிபதி திரு. லிண்டன் ஜோன்சனுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திய பின், பத்திரிகையாளர்களிடையே பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அக்காபா வளைகுடா ஒரு சர்வதேச நீர்வழி என்பதை வலியுறுத்துமுகமாக உலக கப்பல் வர்த்தக நாடுகள் கூடிப்பேச வேண்டுமென்ற பிரிட்டிஷ் ஆலோசனையையிட்டு பிரிட்டிஷ் பிரதமர் வில்சன், ஜனாதிபதி ஜோன்சனுடன் பேசினார். அக்காபா வளைகுடாவில் சுதந்திரப் போக்குவரத்து உரிமை நிலைநாட்டப்படவேண்டுமென்று கூறிய பிரதமர் வில்சன், தாம் ஜோன்சனுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றிய அறிக்கை ஒன்று விரைவில் வெளியிடப்படுமெனத் தெரிவித்தார்.

### வருத்தத்துக்குரியது

காஸா எல்லையிலிருந்து ஐ. நா. அவசரகாலப் படையை வாபஸ் பெற்ற முடிவானது வருத்தத்துக்குரிய தொன்றுகுமென வில்சன் குறிப்பிட்டார். ஏதோ ஒரு வகையில் ஐ. நா. அங்கு மீண்டும் தனது நிலையை நிலைநாட்ட வேண்டுமென்பதே பிரிட்டனின் விருப்பமென்றும் அவர் கூறினார்.

அக்காபா வளைகுடாவில் பலாத்காரம் பிரயோகிப்பதற்கு ஐ. நா.வின் ஐரோப்பிய அங்கத்தவர்கள் ஆதரவு அளிக்கமறுத்துள்ளனர். ஏற்கனவே அக்காபா வளைகுடாவைப் பலாத்காரநடவடிக்கை மூலமாகத் திறக்க எடுக்கப்பட்டுள்ள பிரிட்டிஷ்—அமெரிக்க ஆலோசனைகளை பிரான்ஸ் நிராகரித்துள்ளது. மத்தியதரைக் கடல் பகுதியில் தமது வர்த்தகக் கப்பல்களின் பாதுகாப்பைப் பற்றியே இந்த ஐரோப்பிய நாடுகள் கவலை கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

### ஐ. அ. குடியரசு எச்சரிக்கை

அக்காபா வளைகுடாவினூடாக எந்த நாடாவது பலவந்தமாகச் செல்ல முயன்றால், அந் நடவடிக்கையை ஐ. அ. குடியரசு ஆக்கிரமிப்பாகக் கருதுமென்றும், அத்துடன் அந்நாட்டுக்கு சூயஸ் கால்வாயும் மூடப்படுமென்றும் ஐ. அ. குடியரசு வெளிவிவகார மந்திரி திரு. லியாட் கெய்ரோவில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேற்கு ஆசியாவில். சமாதானத்தை நிலைநிறுத்த உலகின் தலைநகர்கள் பலவற்றில் பரபரப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

### இந்தியாவில் விசேஷ தூதர்

புதுடில்லியில்' ஐ. அ.குடியரசின் விசேஷ தூதர், மேற்கு ஆசிய விவகாரத்தில் இந்தியாவின் நிலையைப் பாராட்டினர். ஐ. அ. குடியரசின் நிலையை இந்தியா முற்றுக உணர்ந்துள்ளது பற்றி அவர் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். ஐ. அ. கு. ஜனாதிபதியின் நன்றி தெரிவிக்கும் செய்தியொன்றை விசேஷ தூதர், இந்திய ராட்டிரபதி டாக்டர் ஸாகிர் ஹுசேயினிடம் கொடுத்தார். பிரதமர் இந்திரா காந்தியையும், வெளியுறவு மந்திரி சாக்ளாவையும் சந்தித்துப் பேசிய அவர். ஐ. நா.வுக்கு புறம்பாக வல்லரசுகள் எதுவித நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாதென வலியுறுத்தினர்.

இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா ஐ. அ. குடியரசையே தமது நாடு ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளார். தாம் விரைவில் ஐ. அ. குடியரசு ஜனாதிபதி நாஸரைச் சந்திக்க விருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

### பந்தோபஸ்து சபை

ஐ. நா. பந்தோபஸ்துச் சபை, மேற்கு ஆசிய விவகாரத்தை விவாதிக்க இன்று மாலை நியூயோர்க்கில் கூடுகிறது.

பந்தோபஸ்து சபையில் ஐ. அ. குடியரசின் தீர்மானமொன்றை இந்தியா பிரேரிக்கவில்லை என இந்தியப் பிரதிநிதி தெரிவித்துள்ளார். சபையில் அங்கத்துவ நாடல்லாத ஒரு நாடு, அங்கத்துவ நாடொன்றின் மூலமாகத் தனது பிரேரணையைச் சபைக்குச் சமர்ப்பிக்கமுடியும். ஐ. அ. கு.வின் பிரேரணை மீது வாக்களிக்கும்படி சபையை இந்தியா கேட்டுக்கொண்டதேயன்றி, பிரேரிக்கவில்லையென இந்தியப் பிரதிநிதி தெளிவுபடுத்தியுள்ளார்.

### பாக்தாத்தில்

பாக்தாத்தில் அரபுநாடுகளின் மகாநாடு ஒன்றை ஈராக் ஜனாதிபதி ஜெனரல் ஆரிப் அழைத்துள்ளார். அரபு நாடுகளுக்குத் துவேஷமாக நடக்கும் நாடுகளுக்கு மண்ணை விநியோகதிதைத் துண்டித்துவிடும்விஷமம் இம் மாநாட்டில் ஆராயப்படும்.

---

## தம்மோதர தகராறு

புதுடில்லி, ஜூன் 3

கல்கத்தா தம்மோதர பள்ளத்தாக்குத் திட்டத்தில் தொழிலாளருக்கும் நிர்வாகத்துக்குமிடையேயான தகராறை அரசாங்கம் தேசிய தொழிற் தகராறு நீதிமன்றத்துக்குச் சிபார்சு செய்துள்ளது.

சம்பந்தப்பட்ட தகராறு தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுவதாலேயே இவ்விதம் சிபார்சு செய்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

---

## தென்வியட்னுமுக்கு மேலும் அமெரிக்க துருப்புகள்

சைகோன், ஜூன் 3

தென்வியட்னுமில் அமெரிக்க துருப்புகளின் தளபதியாகக் கடமையாற்றும் ஜெனரல் வெஸ்ட் மோர்லாண்ட், தென் வியட்னுமுக்கு மேலும் துருப்புகள் அனுப்பும்படி வாஷிங்டனைக் கேட்டுள்ளார்.

தென்வியட்னுமில் தற்போதுள்ள அமெரிக்க துருப்புகளின் எண்ணிக்கை 4 லட்சத்து 35,000 ஆகும்.

---

## எமது பிரச்னைகளை தீர்க்கும் முறை

### அதைக்கொண்டே உலகம் கணிக்கும்

### இந்திரா கூற்று

புதுடில்லி, ஜூன் 3

''நாம் எவ்வாறு வறுமை, பிணி ஆகிய எமது தேசியப் பிரச்னைகளை தீர்க்கிறோமென்பதைக் கொண்டே உலகம் எம்மைக் கணிக்கும்'' என இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறியுள்ளார்.

நேற்று மாலை டில்லி பெட்ரோபொலிடன் கவுன்சில் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

---

## சீன ஜனாதிபதி பதவி நீக்கம்

பீக்கிங், ஜூன் 3

சீன ஜனாதிபதி லியு ஷாசி தற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இவருக்கு எதிராகக் செங்காவலர் எதிர்ப்பியக்கம் நடத்தி வந்துள்ளமை வாசகர்கள் அறிந்ததே.

---

## கதாப்பிரசங்கம்

நாவற்குழி. ஞாயிறு

நாவற்குழி சித்திவிநாயகர் இந்துவாலிபர்சங்க ஆதரவில் விநாயகர் ஆலய மண்டபத்தில் இன்று மாலை நாயன்மார்கட்டு சாம்பசிவக்குருக்கள் கதாகாலட்சேபம் நிகழ்த்துவார்.

---

### உற்சவம்

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் கற்பக விநாயகராலய வருடாந்த மகோற்சவம் இன்று ஆரம்பமானது. இம் மாதம் 18 ம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

---

# ரஷ்ய கப்பல் மீது அமெரிக்க குண்டுவீச்சு

## வட வியட்னுமில் சம்பவம்

## மாஸ்கோ கடும் ஆட்சேபம்

மாஸ்கோ, ஜூன் 3

வடக்கு வியட்னும் துறைமுகமொன்றில் ரஷ்ய சரக்குக் கப்பலொன்றின் மீது அமெரிக்க விமானங்கள் குண்டு வீசியதாக ரஷ்யா அமெரிக்காவிடம் கடுமையான ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

இக் குண்டு வீச்சின் விளைவாக ரஷ்ய கப்பல் சிப்பந்திகளில் இருவரின்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு ரஷ்யா தெரிவித்துள்ள ஆட்சேயக் குறிப்பில், இச் சம்பவத்துக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படவேண்டுமென்றும், இத்தகைய சம்பவம் திரும்பவும் நடைபெருதென உறுதியளிக்கப்படவேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது

அப்படிச் சம்பவம் ஏதும் மீண்டும் நடைபெறுமேயானுல், தனது கப்பல்களுக்குப் பாதுகாப்பை உறுதிளிக்கும் வகையில் ரஷ்யா தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமென அக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### இலவசவகுப்புக்கள்

யாழ்ப்பாணம் சனி

வடமாநில வித்தியாதிபதி திருமதிஆர். நவரத்தினம் தலைமையில் நாவலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றநாவலர் தர்மகர்த்தா சபைக்கூட்டத்தில் தமிழ்-சமயசமஸ்கிருதஉயர் வகுப்புகளையும் புராணபடலம், திருமுறைப்பயிற்சி வகுப்புக்களையும் இம்மாதத்திலிருந்து இலவசமாகக் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது,

---

### அதிபரை மாற்றுதீர்

வெள்ளவத்தை, வெள்ளி

நெல்லியடி அரசினர் மத்தியமஹா வித்தியாலய அதிபர் திரு. சு. இரத்தின சபாபதியை இடமாற்றஞ் செய்வது சம்பந்தமாக மறுப்புத்தெரிவிக்குமுகமாகக் கொழும்பிலுள்ள மேற்படி கல்லூரியின் பழையமாணவர்கள் கூடிஆராய்ந்தனர்.

திரு, சு. இரத்தின சபாபதியைப்போன்ற ஒருதிறமையான நேர்மையான நிர்வாகியை இடம்மாற்றுவது இக் கல்லூரி மாணவர்களுக்கும் பெரு நஷ்டமாகுமென்றும் குறிபாகஎன்ஜினியரிங்பகுதி மாணவர்களுக்குப்பெரு நஷ்டம் என்றும் இவர்கள் தீர்மானித்தனர். எனவே இவரது இடமாற்றத்தை எதிர்த்துக் கல்வியமைச்சுக்கு மகஜர் அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டது.

---

# அமெரிக்க உணவை அண்ணு ஏற்றுர்

## சென்னை துறைமுகத்தில் நடந்த வைபவம்

சென்னை, ஜூன் 2

அமெரிக்க 'கெயர்' ஸ்தாபனம் இந்தியாவுக்கு அன்பளிப்புச் செய்துள்ள 3 கோடி ருத்தல் உணவுப் பொருட்களைச் சென்னை முதல் மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை நேற்று சென்னைத் துறைமுகத்தில் கையேற்றுர்.

அமெரிக்காவின் உதவிக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், உணவு இறக்குமதி செய்யும் நிலையிலிருந்து ஏற்றுமதி செய்யும் நிலைக்கு இந்தியா உயரவேண்டுமென்று காலஞ்சென்ற பிரதமர் ஜவஹர்லால்நேரு தெரிவித்த நம்பிக்கையை திரு. அண்ணுதுரை நினைவூட்டினர். ஜவஹரின் கனவை மக்கள் நினைவாக்க முயலவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

அந்த நிலை எய்தும்வரை இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். உணவுப் பொருளாக மட்டுமன்றி, விவசாயத்தை விருத்தி செய்ய வழி வகைகளையும் உதவியாக அந்நாடுகளிடமிருந்து பெற இந்தியா முயலவேண்டுமென்றுர் திரு. அண்ணுதுரை.

சென்னையிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் திரு. ஜெரூபே - கால்ட்பெல், இந்திய மக்களிடம் அமெரிக்க மக்களுக்குள்ள அன்பைத் தெரிவிக்குமுகமாகவே இவ் உணவுதவியைத் அமெரிக்கா செய்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'காதல் தோல்வி நாடகங்கள் சமுதாயத்தைகெடுத்துவிடும்'

## தமிழ் நாடக வளர்ச்சிக்கு வட்டுக்கோட்டை எம்.பி.யின் யோசனை

சுழிபுரம், வெள்ளி

''நல்ல சமுதாயத்தை உருவாக்க, நல்ல கருத்துக்கள் நிறைந்த நாடகங்கள் எமக்கு தேவை. காதல் தோல்வியும் பரீட்சையில் சித்தியின்மையால் தற்கொலையும் போன்ற கருத்துக்களைக் கொண்ட நாடகங்கள் சமுதாயத்தைக் கெடுத்தே விடுகின்றன. உலக நாடுகளில் நாடக வளர்ச்சி முன்னேறியிருக்கும் அளவுக்கு எமது நாட்டில் முன்னேற்றம் இல்லை. எம்மிடம் திறமைமிக்க நடிகர்களோ, அன்றி நாடக அமைப்புக்கு வேண்டிய சாதனங்களோ இல்லையென்று எண்ணிவிடக் கூடாது. மக்களின் ஆதரவு இல்லாததே இதற்கு உண்மைக் காரணமாகும்'' என்று வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் வழக்கம்பரை ஸ்ரீ அம்பாள் நாடகமன்றத்தினரின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். விழாவுக்கு சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி ஜே.பி தலைமைவகித்தார். திரு. க. வாமதேவன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில், ''காலத்தால் முந்திய முத்தமிழ்மூவேந்தர்களால் காக்கப்பட்டு வளர்க்கப்பட்டு, இடையில் சிற்சில தடைகளால் தடைபட்டு இன்று மக்கள் ஆட்சியில் மக்களால் வளர்க்கப்படும் நிலைமையிலுள்ளது. மன்னர்களின் காலத்தில் இருந்து இன்று வரை எமது நாடகங்கள் பல கஷ்டங்களுக்கிடையேயும், குறைபாடுகளுக்கிடையேயும், மேடையேற்றப்பட்டுவருகின்றன. ஆண், பெண் கதாபாத்திரங்களில் பெண்வேடம் போடுபவர்கள் உண்மையான பெண்ணாக இருக்கமாட்டார்கள் தான் ஓர் ஆண்தான் பெண் வேடம்போட்டு நடிப்பார். எமது பாரம்பரிய பழக்க வழக்கங்கள் சில தடையாக இருப்பதால்தான் இப்படியான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. எப்படியும் வருங்காலத்தில் நல்ல நாடகங்கள் மேடையேற்றப்பட வேண்டும். அதற்கு மக்கள் ஆதரவுநல்கவேண்டும்.''

திரு. மு. சிவானந்தம் பேசுகையில், ''நல்ல கருத்துக்களை பரப்ப நாடகம் ஓர் பெரும் சாதனமாகும்'' என்றார்.

சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு சி. க. திருச்சிற்றம்பலம் பேசுகையில் ''இளைஞர்கள் உள்ளத்தில் நல்ல எண்ணங்கள் நிறைய உண்டு. அவற்றை நல்நிரைப்படுத்த வழிகாட்டிகள்தேவையாகும். தனித்து ஒரு காரியத்தை நிறைவேற்றுவது கஷ்டமாகும். மக்கள் ஆட்சி நடைபெறும் இக்காலத்தில், மன்னர்கள் போல் மக்கள் நமது காரியங்களைச்செய்யவேண்டும்'' என்றார்.

திரு. அரியரத்தினம் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

### சந்தைக்கட்டிடம்

செட்டிகுளம், சனி

செட்டிகுளம் கிராமசபை நிறுவும் சந்தைக்கட்டிட வேலைகள் வெகுதுரிதமாக நடைபெற்று வருகின்றன. சபைத்தலைவர் திரு. பிலுப்பையாவின் நன்முயற்சியால் அமைக்கப்படும் இச்சந்தை வெகுவிரைவில்திறந்துவைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### அத்திபாரம் இடப்படும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தெல்லிப்பளை ஐக்கிய வைத்தியசாலைச் சங்கத்தின் புதிய மருத்துவ மனைக்கு இன்று பிற்பகல் அத்திபாரமிடப்படும். கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. பி. ஈ. வீரமன் அடிக்கல்லை நாட்டுவார்.

### மறைந்த தொண்டருக்கு அஞ்சலி

சுழிபுரம், சனி

பண்ணாகம் விசுவலிங்கத்தனை முருகமூர்த்தி கோவிற் பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. வ. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் சபைத் தனாதிகாரியாகப் பணிபுரிந்த திரு. மா. பரமகுருவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. மறைந்த தொண்டரின் சேவையை எடுத்துக் கூறிய பண்டிதர் அ. ஆறுமுகம், பண்ணாகப்பகுதியில் காந்தியக் கருத்துகள் பரவுவதற்கு மூலகரணமாயிருந்

[6-ம் பக்கம் பார்க்க]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### ஏலவிற்பனை

யாழ்ப்பாணம், 91 கஸ்தூரியார்வீதி சந்திரா அடைவு கடையில் 1-1-66 திகதிக்கு முன்வைத்த நகைகளில் மீட்கப்படாதவற்றை 17-6-67 சனிக்கிழமை முற்பகல்பத்து மணி தொடக்கம் கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளர்.
2314

## வியாபாரி மீதான வழக்கு

### தீர்ப்பு 17ம் திகதி

காங்கேசன்துறை, சனி

சென்ற வருடம் டிசம்பர் மாதம் 26ம் திகதி 35 ருத்தல் கொத்தமல்லி, 112 1/2 ருத்தல் மிளகாய், 35 மூடை மாவு என்பனவற்றை கையிருப்பில் வைத்துக்கொண்டு விற்க மறுத்ததாக சங்கானையைச் சேர்ந்த வி. இராஜகுலசிங்கம் என்பவர்மீது சங்கானைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கை மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா விசாரணைக்கு எடுத்தார்.

யாழ். உணவுக் கட்டுப்பாட்டு உதவி அதிகாரி திரு. மார்க்கண்டு, சங்கானைப் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆரியசேன, எச். பண்டா ஆகியோர் சாட்சியமளித்தனர். எதிரிதரப்பு சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சாட்சிகளை குறுக்குவிசாரணை செய்தபின் நீதிபதி இம்மாதம் 17ம் திகதிக்குத் தீர்ப்பை ஒத்திவைத்தார். சங்கானைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. டயஸ் வழக்கை நடத்தினர்.

# சுகாதாரம் பேணப்படாத ஹோட்டல்களுக்கு ஆபத்து

கொம்பனித்தெரு, சனி

கொழும்பு நகரப் பகுதியிலுள்ள ஹோட்டல்களுக்கு ஆபத்து எதிர் நோக்குகிறது.

பொது மக்களும், பொது ஸ்தாபனங்களும், கொழும்பு நகரப் பகுதியிலுள்ள ஹோட்டல்கள் துப்பரவில்லாமலும், அசுத்தமாகவும், சுகாதாரம் பேணப்படாமலும் இருப்பதாக கொழும்பு மாநகரசபையிடம் புகார் செய்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஹோட்டல்கள் எந்நேரத்திலும் திடீர் சோதனை செய்யப்படலாமென்றும், சுகாதாரம் சரிவரக் கடைப்பிடிக்கப்படவில்லையென்று கண்டுபிடிக்கப் பட்டால், அந்த ஹோட்டல்களின் லைசென்ஸுகள் ரத்துச் செய்யப்படுமென்றும் மாநகரசபை அறிவித்துள்ளது.

### உத்தியோகம் கிடைத்தது

காங்கேசன்துறை, சனி

உள்ளூர் ஆட்சி மன்ற லிகிதர் சேவைக்கான பரீட்சையில்சித்தியடைந்து5வருடங்களுக்குப்பின் உத்தியோகம் வழங்கப்பட்டுள்ளது. 1962ம் ஆண்டு உள்ளூர் ஆட்சி லிகிதர் சேவைக்கான பரீட்சையில் சித்தியெய்திய பரீட்சாத்திகள் 1967ம் ஆண்டுஜூன்1ம்திகதியேஉத்தியோகம் பெற்றுள்ளனர்.

### மறைந்த....

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

தவர் அவர் என்றும் மாணவர் சங்கம், நூல்நிலையம் முதலியவற்றைத் தொடக்கி நடத்திப் பணிபுரிந்தவர் என்றும் முருகன் நிலையத்தின் ஸ்தாபகர் என்ற பெருமைக்குரியவர் எனவும் குறிப்பிட்டு பல சமூகத் தொண்டுகளில் அவர் ஆற்றிய பணி என்றும் நிலைத்து நிற்கும் எனக்கூறினர். திரு. மா. பரமகுருவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் கூட்டத்தில் இரு நிமிடநேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.



யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில் 'நாதன் மியூஸிக்கல் ஸ்டோர்ஸ்' என்னும் புதிய வர்த்தக ஸ்தாபனத்தை டாக்டர் க. சிவஞானரத்தினம் சமீபத்தில் திறந்துவைத்தார்.


கோயில் தேவைகளுக்கும் விவாகம் முதலிய விசேஷ வைபவங்களுக்கும் உபயோகமான

**அபிஷேக சந்தனம்**

கோயில் அபிஷேக திரவியங்கள், வாசனைமிக்க பன்னீர் பரிமளம் நிறைந்த சந்தன வில்லைகள்

**விலைவு நூடம்**

கிடைக்குமிடம்:

**சுந்தரம் பிரதர்ஸ்**

மருந்துச்சரக்கு வியாபாரம்

(புதிய பஸ்நிலையத்துக்கு அருகாமை)

73, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.


## இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

### ஞாயிறு 4-6-67

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 எங்கள் அதிதி.

இரவு 6-15 குரல்வகை, 6-30 நேயர்கடிதங்கள், 6-45 கிறிஸ்தவ ஆராதனை, 7-15 பாட்டு — திருமதி லீலாவதி சண்முகதாஸ், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம் — 'கோடை'.

### புத்தகப் பார்சல் பறிமுதல்

புன்னாலைக்கட்டுவன், சனி

யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள ஆசிரியர் ஒருவருக்குப் பீகிங்கிலிருந்து வந்த புத்தகப்பார்சல் ஒன்றை கொழும்பு சுங்கப்பகுதியினர் பறிமுதல் செய்துள்ளனர்.

நாட்டின் சட்டவிதிகளுக்கும் ஒழுங்குக்கும் முரணான புத்தகங்களைத்தாங்கள் அனுமதிக்கமுடியாதென்று இவ்வாசிரியருக்கு அவர்கள் அறிவித்துள்ளனர்.


**மனோகரா**
யாழ்ப்பாணம்
6-30, — 9-45 p. m.
எம். கே. தியாகராஜ பாகவதர், மாதுரிதேவி, லலிதா, என். எஸ். கிருஷ்ணன், ரி. ஏ. மதுரம் தங்கவேலு, பாலையா முதலியோர் நடித்த
**புது வாழ்வு**

**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
ஜெய்சங்கர் - K. R. விஜயா நடித்த
**பெண்ணே நீ வாழ்க!**

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
கல்யாணகுமார் நடித்த
**தாயில்லாப்பிள்ளை**

**REGAL - JAFFNA**
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Gregory Peck
in
CAPE FEAR


## சுகாதார அமைச்சர் இங்கு வருவார்

காங்கேசன்துறை, சனி

மயிலிட்டி காசநோயாளர் ஆஸ்பத்திரியில் மேலும் 2 புதிய வார்ட்டுகள் அமைக்கப்படவிருக்கின்றன. இதற்காகச் சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன இம்மாதம் 11ம் திகதி உத்தியோகபூர்வமாக வடபகுதிக்கு விஜயஞ் செய்யவிருக்கிறார். அன்றையதினம் காலை, அமைச்சர் அத்திபாரக்கல்லை நாட்டுவாரென்றும், பின்னர் ஆஸ்பத்திரிக்குச் சென்று அங்கு நிலவும் குறைபாடுகள் பற்றி ஆராய்வாரெனவும் தெரிகிறது. அன்று காங்கேசன்துறை பட்டினசபை நடத்தும் சுகாதார வார விழாவிலும் அமைச்சர் கலந்துகொள்வாரெனத் தெரிகிறது.

### ஜூலை 10க்குள் விண்ணப்பிக்க வேண்டும்

கொம்பனித்தெரு, சனி

மத்திய அரசாங்க எழுதுவினைஞர் பரீட்சை செப்டம்பர் 25-ம் திகதி நடைபெறவிருக்கிறது. இப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய இறுதித் திகதி ஜூலை 10-ம் திகதியென அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான விபரங்கள் இம் மாதம் 9-ம் திகதி வெளியாகும்அரசாங்கவர்த்தமானியில் வெளியிடப்படும். இல்லாவிடில் 19-ம் திகதிய வர்த்தமானியில் வெளியாகும்.

முன்னரைப் போல விண்ணப்பப்பத்திரங்கள் இந்தத் தடவை விநியோகிக்கப்படமாட்டாதெனவும் விண்ணப்பிக்க விரும்புவோர் தாமே அரசாங்கவர்த்தமானியிலிருந்து விண்ணப்பப்பத்திரங்களைத் தயாரித்து நிரப்பியனுப்ப வேண்டுமெனவும் தெரிய வரு


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## வரி விளமபரம

### விற்பனைக்கு

காணி:

பண்ணை — காரைநகர் ரேட்டில் [வில்லூன்றி பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில்] 75 பரப்பு காணி விற்பனைக்குண்டு. திருமதி V. சுப்பிரமணியம், 42, கொட்டடி, ''செல்லஸ்தான்'', ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 1879

### தேவை

ஆசிரியைகள்:

ஆசிரியைகள் + பணைப் பொறுப்பாளர்கள் தேவை. சிறிய உரொக்கப் பிணை செலுத்தக் கூடியவர்கள் காலை 10 மணி முதல் மாலை 3-30 மணி வரை நேரில் சந்திக்கவும். அதிபர், சிறுவர் பாடசாலை, 422, கே. கே. எஸ். வீதி, வண்ணார் பண்ணை. 1884

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### கல்வி

வகுப்புகள்:

ஜீ - ஏ. கியு, ஜீ. ஸி. ஈ. உயர் / சாதாரண தரங்கள் கலை / விஞ்ஞானம் / வர்த்தகம், சிங்களம் ஆகிய வகுப்புகள் காலை மாலை நடைபெறுகின்றன. உடனே சேருங்கள். யாழ்ப்பாண டியுட்டோறியல் கல்லூரி [Jaffna Tutorial College], கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர் / நெல்லியடி, கரவெட்டி. 1886


நாளை முதல்

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி [கொழும்பு] | ஈரோஸ் [பாமன்கடை] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்] |
| விஜயா [மட்டக்களப்பு] | ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] | மொடேர்ன் [பதுளை] |
| மொடேர்ன் [பண்டாரவளை] | விஜிதா [ஹட்டன்] | தீவொளி [நுவரெலியா] |
| | கல்யாணி [நாவலப்பிட்டி] | |

சிவாஜி கணேசன்
கே. ஆர். விஜயா
ராமசாமி, எஸ். வி. சகஸ்ரநாமம்
எம். வி. ராஜம்மா, சுந்தரிபாய்,
நாகேஷ்
நடித்த
**செல்வம்**

6-வது வெற்றி வாரம்
கெப்பிட்டல் [கொட்டாஞ்சேனை]
கடைசி வாரம்
பிளாஸா [வெள்ளவத்தை] வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
ரவிச்சந்திரன் — ஜெயலலிதா
நடித்த
**குமரிப்பெண்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் மனைவி கொலைவழக்கு

# குதிரை சவுக்கால் கணவர் அடிப்பாராம்

## பத்மினி கூறியதாக புறக்டர்சாட்சியம்

காலி, வெள்ளி

பத்மினி குலரத்ன கொலை வழக்கு விசாரணை இன்று மீண்டும் நடைபெற்றபோது சமாதான நீதவான் புறக்டர் டபிள்யு. ஏ. ஜே. டபிள்யு. சேரசிங்க சாட்சியமளிக்கையில் பின்வருமாறு கூறினார்:

கடந்த 14 ஆண்டுகளாக நான் காலியில் தொழில் நடத்துகின்றேன். விவாகரத்து தாக்கல் செய்யப்படுவதற்கு மூன்று மாதத்துக்கு முன் காலஞ்சென்ற பத்மினி என்னை சந்தித்து விவாகரத்து வழக்கில் தம் சார்பில் ஆஜராகும்படி கேட்டுக்கொண்டார். அது சிவில் வழக்கான படியால் என்னால் முடியாது என்று கூறினேன். மற்ற எல்லா வழக்கறிஞர்களும் டாக்டர் குலரத்னவுக்கு தெரிந்தவர்கள் என்று என்னை ஆஜராகும்படி அவர் வேண்டினார்.

நான் அட்வக்கேட் கே. சின்னையா தியாகலிங்கம் கியூ. சி.யை ஏற்பாடு செய்தேன் காலஞ்சென்றவர் தமது குடும்பவிவகாரங்கள் பற்றி என்னிடம் கூறினார். இரண்டு கார்களில் ஒன்றும் அவருக்கு கொடுக்கப்படுவதில்லை. டெலிபோனும் பூட்டப்பட்டிருக்கும். வேறு இடத்தில் குடியிருக்கும்படி நான் யோசனை கூறினேன், தனது கணவன் அவருடைய தாயாரின் கைப்பொம்மையாகிவிட்டதாக காலஞ்சென்றவர் கூறினார். குதிரை சவுக்கால் கணவர் தம்மை அடித்ததாகவும் அவர் கூறினார். தாம் விவாகரத்துக்கு சம்மதிக்கவில்லை என்றும் சிலர் வந்து தமக்கு ஒரு லட்சம் ரூபாய் தருவதாக கூறியதாகவும் பத்து லட்சம் ரூபாய் தந்தாலும் தாம் இணங்க முடியாது என்று பதிலளித்தாகவும் காலஞ்சென்றவர் என்னிடம் கூறினார். ஐ. ஜி. பியைப்போய் சந்திக்கும்படி நான் கூறினேன்.

இந்த வழக்கில் டாக்டர் குலரத்னவும் அவருடைய தாயாரும் இரண்டு பணிப்பெண்களும் முதல் எதிரியின் மனைவியான பத்மினி குலரத்னவை கொலை செய்ய சதி புரிந்ததாகவும் நஞ்சூட்டி அவரைக் கொன்றதாகவும் காலி கூட்டு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

# 'மைத்துனர் சம்பா அரிசிசாப்பிட பத்மினி வாழைத்தோல் சாப்பிட்டார்

## இறந்தவரின் கணவர், மாமியார் இழைத்த "கொடுமைகள்" பற்றி சாட்சியம்

பத்மினி தமக்கு முதல்எதிரியும் [பத்மினியின் கணவரான டாக்டர் குலரத்ன] இரண்டாவது எதிரியும் [டாக்டர் குலரத்னவின் தாயார்] இழைத்த கொடுமைகள் பற்றி என்னிடம் தெரிவித்திருந்தார். நான் ஒரு தடவை அவரிடம்சென்றிருந்த போது மேசையின் ஒரு பக்கத்தில் உணவு அருந்திக்கொண்டிருந்த பத்மினி தாம் மில்சாட் சோறும் கருவாட்டுக் கறியும் வாழைப் பழத்தோலும் சாப்பிட்டுக் கொண்டிருப்பதாகக் கூறினார். இந்த மேசையின் பக்கத்தில் டாக்டர் குலரத்னவின் சகோதரரான பேர்ஸி சம்பா அரிசிச் சோறைக் கோழி இறைச்சியுடனும், றால் கறி, உருளைக்கிழங்குக் கறி, பருப்புக் கறியுடனும் அருந்திக் கொண்டிருந்தார்.

இவ்வாறு டாக்டர் குலரத்தினவின் மனைவியான பத்மினியின் கொலை வழக்கு விசாரணை நேற்று மீண்டும் காலி மேலதிக மாஜிஸ்திரேட் திரு.கொலின் மென்டிஸ் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது திரு.ஜே.நாணயக்காராவின் மனைவியான 42வயதுடையமல்லிகாசாட்சியமளிக்கையில் கூறினார்.

திருமதி மல்லிகா நாணயக்காரா தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: நான் காலஞ்சென்ற பத்மினிக்கு ஒருவார காலம்வரை மத்தியான உணவு கொடுத்து வந்தேன். அவர் எனது வீட்டுக்கு வந்து தமக்கு உணவு தருமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்கவே நான் இவ்வாறு கொடுத்து வந்தேன். தமது வீட்டில் தமக்கு உணவு நிறுத்தப்பட்டுவிட்டதாக அவர்என்னிடம் தெரிவித்திருந்தார். நான் அவருக்கு இலவசமாகவே உணவு கொடுத்துவந்தேன்.

முதலாவது எதிரியையும் காலஞ்சென்றவரையும் சுமார் 12 வருடங்களாகத் எனக்குத் தெரியும்.

ஏப்ரல் மாதம் 9-ம்திகதி பத்மினிமயக்கமுற்றதுபற்றி எனக்குத் தெரிய வந்தது.

பத்மினி காலஞ்சென்ற பின்னர் நான் அவரதுஅறைக்கு சென்றிருந்தேன். அந்த அறை தளபாடங்கள் நிறைந்து ஒழுங்கற்ற நிலையிலிருந்தது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 'செக்' புத்தகம் யாருடையது?

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மெர்கன்டையில் வங்கியைச் சேர்ந்த திரு. வி. இராஜரத்தினம் என்பவர் பஸ்ஸில் செக் புத்தகம், பணம் ரசிதுகள் அடங்கிய பாக்கொன்றை எடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர்கள் அத்தாட்சி காண்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

# முன்னைநாள் வைத்திய அத்தியட்சகர் காலமானார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

முன்னைநாள் வைத்திய அத்தியட்சகரும், சமூக, சமயத் தொண்டருமான டாடர் எஸ். குருசாமி நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் அவரது இல்லத்தில் காலமானார்.

## தமிழ் மகாவித்தியாலயம்

கொத்மலை, சனி

கம்பளையில் ஒரு தமிழ் மகாவித்தியாலம் அமைக்க கல்விஇலாகா காணிஒன்றை வழங்கவிருப்பதாக தெரிகின்றது. மேற்படி வித்தியாலயம் நிறுவ கம்பளை இந்துமகாசங்கத்தினர் நிதியுதவி சேர்க்கவிருக்கின்றனர். மலையக நியமனஎம்.பி. திரு. வே. அண்ணாமலை பலகாலமாக கல்விஇலாகாவை கம்பளையில் ஒரு தமிழ் மகாவித்தியாலயம் நிறுவித்தருமாறு வற்புறுத்திவந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்து மாணவர் சங்கம

வெள்ளவத்தை, சனி

கனடா அரசாங்கத்தின் அன்பளிப்பாக இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்ட கட்டுப்பணத்தை தொழில் நுட்பக் கல்லூரியின் தமிழ்மாணவர்கள் சங்கத்தை விஸ்தரிக்கவும் இந்து மாணவர் சங்கம் ஒன்றினை ஏற்படுத்தி சமயக்கொண்டாட்டங்களை நடாத்தவும் தமிழ் மாணவர் குழு தீவிரமாக இயங்கி வருகிறது.

## மன்னார் மெல்லிசை மன்றம்

மன்னார், சனி

மன்னார்ப்பகுதியிலுள்ள சகல கலைஞர்களையும் ஒன்று சேர்த்து பண்டைத்தமிழ்க் கலைகளை வளர்ப்பதில் மன்னார் மெல்லிசை மன்றம் அதிக அக்கறை காட்டி வருவதால் அதற்கு அரசாங்க நிதி உதவி பெற்றுத் தரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மன்னார் எம். பி. திரு. அழகக்கோனையும், மன்னார் பட்டினசபைத் தலைவரையும் கேட்பது என்ற தீர்மானம் மேற்படி மெல்லிசைமன்றக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

உணவுஉற்பத்தி சம்பந்தமாக எதிர்வரும் ஜூன் மாதத்தில் மன்னார் அரசாங்கஅதிபர் நடாத்தவிருக்கும் மன்னார் மாவட்ட கலைநிகழ்ச்சிகளில் மேற்படி மன்றம் கலந்துகொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

# இஸ்ரேல்-சிரியா எல்லையில் மோதல்

கெய்ரோ, ஜூன் 2

இஸ்ரேல் - சிரிய எல்லையில் இன்று ஏற்பட்ட ஒரு கைகலப்பில் இரண்டு இஸ்ரேல் ரோந்துப் படையினர் கொல்லப்பட்டதாக செய்தி கிடைத்துள்ளது. சிரியா வீரர் ஒருவரும் மாண்டதாக ஒரு அதிகாரி கூறினார்.

**சூயஸ் பற்றி மீண்டும் எச்சரிக்கை**

அகாபா வளைகுடாவில் விதிக்கபட்டுள்ள தடையை பலாத்காரமான முறையில் யாரும் மீற முயற்சி செய்தால் சுயஸ் கால்வாய் மூடப்படும், என எகிப்திய செய்திப் பத்திரிகையான 'அல் அஹ்ரம்' செய்தி வெளியிட்டுள்ளது.

அகாபா வளை குடா தடையை எந்த ஒரு நாடும் மீற முயற்சிக்கும் நடவடிக்கை பலாத்கார நடவடிக்கையாகவே கருதப்படுமென்றும் அப்பத்திரிகை அறிவித்துள்ளது.

**வாஷிங்டனில்**

மேற்கு ஆசியாவில் நிலவி வரும் சூழ்நிலையை உத்தேசித்து ஆசிய பிராந்தியத்திலிருக்கும் பிரிட்டிஷ் துருப்புக்களை வாபஸ் பெறுவதை ஒத்திவைக்குமாறு பிரிட்டிஷ் பிரதமர் வில்சனை கேட்டுக்கொள்வதென அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்சனும் நியுயோர்க் விஜயம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய [illegible] ஹோல்ட்டும் முடிவு செய்துள்ளனர்.

# பட்டிருப்பு மக்களை பிரதமர் ஏமாற்றிவிட்டார்

நமது நிருபர் பொ. கிருஷ்ணபிள்ளை —

செட்டிபாளையம், வெள்ளி

பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவின் கிழக்கிலங்கை விஜயத்தின் போது பட்டிருப்புத் தொகுதி மக்கள் பெரும் ஏமாற்றமடைந்தனர்.

பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயக்கா கடந்த 28-ந் திகதி காலை மட்டக்களப்பு விமான நிலையத்தில் வந்திறங்கினார். அங்குஅவர்வரவேற்கப்பட்டுகச்சேரிக்கு அழைத்துச்சென்றுபல விஷயங்கள் ஆராயப்பட்ட பின்னர் கற்குடாத் தொகுதியின் பல பகுதிகளுக்கும் அழைத்துச் செல்லப்பட்டார். முன்பு கற்குடாத் தொகுதியில்புணாணை அணைக்கட்டு, உன்னிச்சை குடியேற்றத் திட்டம் ஆகியவைகளை மாத்திரமே பார்வையிடுவதாக ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தும், விஷயங்கள் இதற்கு மாறாகவே நடைபெற்றன. கற்குடாத் தொகுதியின் மூலை முடுக்குகளெல்லாம் பிரதமரை வரவேற்க ஒழுங்குகள் செய்யபட்டதால், ஏனைய இடங்களுக்குச் செல்வதில் தாமதம் ஏற்பட்டது.

இரவு சுமார் 9 மணியளவில் பிரதமர் பட்டிருப்புத் தொகுதியை நோக்கிபிரயாணத்தை ஆரம்பித்தார். பட்டிருப்புத் தொகுதியில் தும்பங்கேணி வாலிபர் குடியேற்றத் திட்டம், குருக்கள்மடம் பசளை ஸ்டோர் ஆகியவற்றைத் திறப்பதாகவும் குறிக்கப்பட்டிருந்தது. தும்பங்கேணி குடியேற்ற வாலிபர்கள் பிரதமரை வரவேற்க பல ஒழுங்குகளைச் செய்திருந்தார்கள். பட்டிருப்புப் பிரதிநிதி திரு.சி.மூ. இராசமாணிக்கமும் வாலிபர்களுடன் சேர்ந்து பிரதமரைவரவேற்க ஆயத்தமாகவிருந்தார். நள்ளிரவு பன்னிரண்டு மணியாகியும் பிரதமர் அங்கு வரவில்லை. பட்டிருப்புப் பிரதிநிதி நிதி தொடக்கம் அனைவரும் ஏமாற்றமடைந்தனர். பின்புதான் பிரதமர் மட்டக்களப்பையடைந்து விட்டதாகத் தகவல் கிடைத்தது.

பிரதமருக்கு வழிகாட்டி அழைத்துவந்த பொலிசார் வேறுபாதையால் பழுகாமத்தின் ஊடாக மட்டக்களப்புக்கு அழைத்துச் சென்றதாகக் கூறப்படுகின்றது. அரசாங்க குடியேற்றத் திட்டத்திற்குப் பிரதமர்போகாமைக்குக் காரணம் யாதென மக்கள் வினவுகின்றனர். பட்டிருப்புத் தொகுதிமேல் இவ்வளவு கோபம் ஏன் என்றும் அவர்கள் கேட்கின்றனர். பிரதமரின் தும்பங்கேணி விஷயம் தடைப்பட்டமைக்கு முழுக்க முழுக்கக் காரணமாக இருந்தவர்கள் பொலிசாரே என பட்டிருப்புப்பிரதிநிதி திரு. இராசமாணிக்கம் கூறினார்.

ஈற்றில்தும்பங்கேணிவாலிபர் குடியேற்றத் திட்டத்தைத் திறந்து வைத்த திரு. சி.மூ.இராசமாணிக்கம் பிரதமர் இங்கு வராமைக்கு நாம் வருந்த வேண்டியதில்லையென்றும் அவர்மீது எவ்விததவறுமில்லையென்றும் அவருக்கு வழிகாட்டியவர்களே இதற்குப் பொறுப்பாளிகளென்றும் கூறினார்.

## ஐயாறன்

[2ம் பக்கத் தொடர்ச்சி]

பொடிப் பழக்கமே கைக்கொண்டேன். இமாசலம் சென்று யாழ்ப்பாணம் திரும்பியும், பொடிப்பழக்கம் பற்றிக் கொண்டது. தொடக்கத்தில் 5 சதம் பொடி, பின் படிப்படியாக அரை றாத்தலுக்கு உயர்ந்துவிட்டது! புகையிலையிலிருந்து பொடிக்கு மாறியது, சட்டியிலிருந்து நெருப்பில் விழுந்தது போலாயிற்று. இதனால் உடல் நலம் பாதித்ததால், இதை அடியோடு விடவேண்டுமென்று சபதம் செய்தேன்.

ஃ ஃ ஃ

படிப்படியாகக் குறைத்துக் கொள்ளலாமென்று 4 நாள் குறைத்தால் ஐந்தாம் நாள் வட்டியும் சேர்த்து முன் இருந்ததிலும் பார்க்க மூன்றுமடங்கு அதிகமாகிவிடும். 'நிக்கோட்டின்' என்னும் அரக்கன் நிமிஷத்துக்கு நிமிஷம், சுருட்டை மூட்டு, சிகரெட்டை மூட்டு, பொடியைப் போடு என்று பிடரியைப் பிடித்து உந்திக் கொண்டிருப்பான். இந்த அரக்கனின் உபத்திரவம் தாங்காமல்தான், புகை, பொடி முதலிய பழக்கத்துக்குப் பலரும் அடிமைப்பட்டுக் கிடக்கிறோம். இந்த அரக்கனை தீவிர வைராக்கியமெனும் ஆயுதத்தால் அன்றி வேறு எந்த வகையாலும் கொல்ல முடியாது.

ஃ ஃ ஃ

முடிவில் இந்தத் துஷ்ட அரக்கனை வெற்றி கொள்ளத்தான் வேண்டுமென்ற சித்த வைராக்கியத்துடன் என்னிடம் எஞ்சியிருந்த புகையிலைகளையும் பொடியையும் தீக்கிரையாக்கினேன். இன்று இந்த நேரம் தொடக்கம் இந்தக் கெட்ட பழக்கங்களுக்கு இடம் கொடுப்பதில்லை என்று விரதம் பூண்டேன். ஆனால் 'நிக்கோடின்' என்ற அந்தத் துஷ்ட அரக்கனோ என்னை விட்டபாடில்லை. நேரத்துக்கு நேரம்தொல்லை கொடுக்க அவ்வப்போது எதிர்த்து நின்று மூன்றே மூன்று கிழமைகளில் அவ்வரக்கனைக் கொன்று பூரண வெற்றியுமடைந்தேன். இன்றைக்குக் கிட்டத்தட்ட 12 வருடங்களுக்கு மேலாகியும் எவ்வித கெட்ட பழக்கங்களுக்குமாளாகாமல் சுதந்திரமாகவும் ஆரோக்கியமாகவும் ஜீவிக்கிறேன். அனுபவத்தை எழுதும்படி தாங்கள் பணித்ததற்கிணங்க, இதை எழுதி அனுப்புவது எனது தலையாய கடமையாயிற்று.''

ஃ ஃ ஃ

தன்னை வென்ற இவ்வன்பரைப் பாராட்டுவதுடன் தன் அனுபவத்தை ருசியாக எழுதிய மைக்காக நன்றி கூறுகிறேன். வேறு யாருக்கும் இவ்வித அனுபவமிருப்பின் பொது நன்மைக்காக எழுதி அனுப்ப மீண்டும் வேண்டுகிறேன்.

ஃ ஃ ஃ

ஈசனீச [illegible]னென்று என்று  
மரற்றுபவன்  
ஈசன் தானென் மனத்திற்  
பிரிவிலன்  
ஈசன் தன்னையும் என்  
மனத்துக் கொண்டு  
ஈசன் தன்னையும் யான்  
மறக்கிற்பனே.  
— அப்பர்சுவாமிகள்

ஈசன் ஈசன் என்று வாய்விட்டு சொல்லிக் கொண்டிருப்பேன். ஈசன் என்மனதில் நீங்காது எழுந்தருளியிருப்பவன், ஈசனையும் என் மருத்துக் கொண்டபின், தன்னையான் மறக்க முடியுமோ?]

## விஞ்ஞான ஆசிரியர் இல்லை

சங்கானை, சனி

சண்டிருப்பாய் இந்துக்கல்லூரியில் கடமையாற்றிய விஞ்ஞான ஆசிரியர் மாற்றப்பட்டு இதுகாலவரை அவ்விடம் நிரப்பப்படாமையால் அங்கு பயிலும் மாணவர்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர், இதையிட்டுப் பெற்றோர் கல்வி இலாகாவுக்கு முறையிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org